Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 454/2024**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முனிராஜ் | ஜாதி | : | |
| த/பெ | : | மாணிக்கம் | தொழில் | : | அரசு பேருந்து ஓட்டுநர் |
| கிராமம் | : | சின்னமனூர் | சமயம் | : | |
| தாலுகா | : | தேனி | வயது | : | 50/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் சின்னமனூரில் குடியிருந்து கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்தில் ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 05.12.2023 ஆம் தேதி TN 58 N 1974 என்ற அரசுப்பேருந்தில் நான் ஓ்ட்டுநராக பணி புரிந்த போது எனது பேருந்தில் நடத்துனராக வழக்கில் காயம் பட்ட பாண்டியராஜ் என்பவர் பணிபுரிந்தார். அன்றையதினம் மாலை 05.00 மணிக்கு அரசு பேருந்தை நான் ஓட்ட பாண்டியராஜன் அதில்நடத்துனராக வேலை பார்த்து திண்டுக்கல்லுக்கு வந்து கொண்டிருந்த போது ஆதிலெட்சுமிபுரம் வந்த போது எனது பேருந்து ரேடியேட்டர் பழுதாகி நின்று விட்டது. எங்களது பேருந்தில் வந்த பயணிகளை இறக்கி மாற்று பேருந்தில் ஏற்றி விட்டு எனது பேருந்தை ரோட்டின் ஓரத்தில் நிறுத்துவதற்காக என்னுடன் பணிபுரிந்த பாண்டியராஜன் என்பவரை பேருந்தின் பின்னால் இடது புறத்தில் நின்று கொண்டு பின்னால் வரும் வண்டிகளை சைகை காண்பித்து கொண்டிருந்தார். அப்போது எங்களுக்கு பின்னால் திண்டுக்கல்லில் இருந்து வந்த TN 57 2160 என்ற அரசு பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநர் பாண்டியராஜன் நின்று கொண்டிருந்ததை கவனிக்காமல் ஓட்டி வந்து அவர் மீது மோதியதில் அவர் கீழே விழுந்து விட்டார். அதனை நான் எனது சைடு பக்க கண்ணாடி வழியாக பார்த்து வண்டியை நிறுத்தி விட்டு வந்து பாண்டியராஜனை தூக்கி பார்த்த போது வலது பக்க தோள்பட்டையில் காயம் இருந்தது. அவரால் கையை தூக்க முடியவில்லை. வலது பக்க காலிலும் சிராய்ப்பு காயம் இருந்தது. காயம்பட்ட

பாண்டியராஜனை எனது பேருந்தில் ஏற்றிக் கொண்டு திண்டுக்க்ல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். பாண்டியராஜன் மீது மோதிய அரசு பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநரை நான் பார்த்தேன். அவர் தான் ஆஜர் எதிரி. உடனே நான் பாண்டியராஜன் வீட்டிற்கு விபத்து நடந்தது சம்மந்தமாக தகவல் தெரிவித்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து ஏற்பட்ட சமயம் எத்தனை மணி இருக்கும் என்றால் இரவு 08.50 மணி இருக்கும். சின்னாளபட்டி -ஆத்தூர் இணையும் சாலைப்பிரிவு நெடுஞ்சாலையின் நடுவே இரும்பால் ஆன தடுப்புகள் வேகத்தை குறைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து ஆதிலட்சுமிபுரத்திற்கு முன்பாக நடந்ததா அல்லது ஆதிலட்சுமிபுரத்தை தாண்டி நடந்ததா என்றால் ஆதிலெட்சுமிபுரத்தை தாண்டி நடந்தது. தடுப்பிலிருந்து 50 மீட்டர் தள்ளி நடந்தது. விபத்து நடந்த பிறகு வாகனம் ஆதிலட்சுமிபுரத்திற்கு தென்புறத்தில் நிறுத்தப்பட்டதா, வடபுறத்தில் நிறுத்தப்பட்டதா என்றால் வடபுறத்தில் நிறுத்தப்பட்டது. வாகனங்கள் பழுதாகி நிற்கும் போது ஒளிரும் தன்மையுடைய பொருட்களை ரோட்டில் வைத்து பின்னால் வரும் வாகனங்களுக்கு சமிக்கை செய்யவேண்டும் என்றால் சரிதான். வைக்கவில்லை ஆனால் பேருந்தின் பின்புறத்தில் உள்ள விளக்குகள் போடப்பட்டு எரிந்து கொண்டிருந்தது. பேருந்து பழுதான நேரத்தில் இருந்து எவ்வளவு நேரத்தில் இந்த விபத்து நடந்தது என்றால் 20 நிமிடத்தில் நடந்தது. நீங்கள் பயணிகளை மாற்று பேருந்தில் ஏற்றி அனுப்பிய பிறகு ரோட்டின் கிழக்குபுறம் பேக்கரி மற்றும்பெரிய காலியிடம் உள்ளது என்றால் சரிதான். பழுதான வாகனத்தை போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் மேற்சொன்ன காலியிடத்தில் நிறுத்துவதற்கு நீங்கள் முயற்சி செய்யவில்லை என்றால் முயற்சி செய்தோம் ஆனால் வண்டி ஓடும் நிலையில் இல்லை. விபத்து நடந்ததாக கூறும் பகுதி வாகன நெரிசல் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். ஆதிலட்சுமிபுரத்திற்கு முன்புறமும், பின்புறமும் விபத்து நடந்த இடத்தில் தடுப்புகள் இருந்ததால் வாகனங்கள் வேகமாக செல்ல முடியாது என்றால் சரிதான். வாகனம் மோதியதை நீங்கள் பேருந்தில் ஓரத்தில் உள்ள கண்ணாடியில் பார்த்ததாக கூறியது எந்த பக்கத்தில் உள்ள கண்ணாடி என்றால் பேருந்து இடது பக்கத்தில் உள்ள கண்ணாடி. ரோட்டின் இடது பக்கத்தில் சம்பவத்தின் போது வெளிச்சம் எதுவும் இல்லை என்றால் சரிதான். பின்னால் வந்த வாகனத்தின் வெளிச்சத்தை வைத்து நான்

பார்க்கும் போது நடத்துனரின் சத்தம் கேட்டது, நான் வண்டியை நிறுத்தி விட்டு வந்தேன். நடத்துனர் இருபுறத்தில் இருந்து வரும் வாகனங்களை கவனிக்காமல் ரோட்டின் நடுப்பகுதியில் நின்று கொண்டு எந்த வித சமிக்கையும் செய்யாமல் ஒழுங்கு செய்து கொண்டிருந்த போது தானாக தவறான சமிக்கைகள் மூலம் விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல, பேருந்தின் இடது ஓரத்தில் தான் நின்றிருந்தார். விபத்து நடந்த பிறகு எதிரியும் சேர்ந்து தான் நடத்துனரை செம்பட்டியில் உள்ள பாக்கியமீனா மருத்துவமனைக்கு ஃஅழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். நடந்துநருக்கு ஏற்கனவே முதலுதவி செய்த விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும் நடத்துநர் என்னிடம் கூறினார் , வலி தாங்க முடியவில்லை என்பதால் நான் திண்டுக்கல்லுக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றேன். பழுதான ஓடாத வாகனத்தை எடுத்து மீண்டும் திண்டுக்கல் சென்றீர்களா என்றால் சரிசெய்து எடுத்து சென்றோம். எதிரியை எப்போது பார்த்தீர்கள் என்றால் சம்பவம் நடந்த ஃஅன்று பார்த்தேன். பழுதான பேருந்தை சரியான சமிக்கையின்றி ரோட்டின் இடதுபுறம் நிறுத்தாமல் அஜாக்கிரதையாக நீங்கள் செயல்பட்டதால் தான் வாகன விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. உங்கள் நடத்துனரின் அஜாக்கிரதையின் காரணமாக அவர் விபத்தை ஏற்படுத்திக் கொண்டால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 454/2024**

**Deposition of PW.5 (LW.6)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணனக்குமார் | ஜாதி | : | |
| த/பெ | : | முருகானந்தம் | தொழில் | : | மளிகை கடை வியாபாரம் |
| கிராமம் | : | ஆதிலட்சுமிபுரம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 46/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் ஆதிலட்சுமிபுரத்தில் குடியிருந்துகொண்டு மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் சாட்சியாக போடப்பட்டுள்ள கையெழுத்துக்களில் முதலாவது கையெழுத்து என்னுடையது தான். என்னுடன் சேர்ந்து எங்கள் ஊரைச் சேர்ந்த ராஜேந்திரன் என்பவர் கையெழுத்து செய்தார். மேற்படி கையெழுத்தை கடந்த 6, 7 வருடத்திற்கு முன்பு ஆதிலட்சுமிபுரம் பிரிவில் செம்பட்டி காவல்நிலையத்தில் வந்த போலிசார் அந்த இடத்தில் விபத்து நடந்தது சம்மந்தமாக படம் வரைந்து விசாரித்து எங்களிடம் கையெழுத்து கேட்டார்கள். நாங்கள் போட்டுக்கொடுத்தோம். பார்வைமகசரில் உள்ள என்னுடைய முதலாவது கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ.2/PW.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் உங்களை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் ஆதிலட்சுமிபுரம் விபத்து நடந்த இடத்திற்கு பக்கத்தில் என் கடை உள்ளது, அங்கு வைத்து விசாரித்தார்கள். நீங்கள் கையொப்பம் செய்த பேப்பரில் எழுதியிருந்ததா என்றால் எழுதியிருந்தது. போலிசார் உங்களை விசாரிக்கவில்லை என்றும், நீங்கள் ஊர்

முக்கியஸ்தர் என்பதால் காவல்நிலையத்திற்கு அடிக்கடி சென்று வருவதால், அவர்கள் தயார் செய்து வைத்த பார்வைமகசரில் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor